உ
சிவமயம்

தெய்வத்திரு. நாச்சியப்ப சுவாமிகள்

போற்றிப் பாமாலை



சீர் வளர் சீர்
மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள்
எழுதியது

உ
சிவமயம்

தெய்வத்திரு. நாச்சியப்ப சுவாமிகள்

போற்றிப் பாமாலை



சீர் வளர் சீர்
மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள்
எழுதியது

உ
சிவமயம்

ஞான சற்குரு நாதா போற்றி
நாச்சி யப்பர் நற்றாள் போற்றி

மோனத் தவசி ரட்சகா போற்றி
வேதம் வளர்த்த வித்தகா போற்றி

ஆணவ வேரறத்து ஆண்டாய் போற்றி
அன்பே உருவம் ஆனாய் போற்றி

நானடிமை வணங்கினேன் போற்றி போற்றி
வானின்று ஆசி வழங்குவாய் போற்றி 4

எந்தையும் தாயும் ஆனாய் போற்றி
சிந்தை நிறைந்த செல்வா போற்றி

உலகம் சுற்றிய வாலிபா போற்றி
பழகுதற்கு இனிய பண்பா போற்றி

எதையும் நொடியில் உணர்வாய் போற்றி
எதற்கும் அஞ்சா ஏறே போற்றி

கண்டது செய்யும் கலைஞா போற்றி
பண்ணில் மலரும் ஆனந்தா போற்றி 8

கல்விச் செல்வம் அளித்தாய் போற்றி
இல்லம் தேடி உதவினாய் போற்றி

வேத ஆகமப் புரவலா போற்றி
சில்ப சாஸ்திரச் செல்வா போற்றி

ஆகமம் தமிழாக்கத் துடித்தாய் போற்றி
புராணம் புதுக்க நினைத்தாய் போற்றி

தேரின் வகைதேற எண்ணினாய் போற்றி
கோயிற்குளம் ஆய்ந்திடக் கருதினாய் போற்றி 12

வள்ளுவர் இளங்கோ விழாவெடுத்தாய் போற்றி
தொல்காப்பியர் காலம் ஆய்ந்தாய் போற்றி

திருமுறைச் சபைகள் கூட்டினாய் போற்றி
அருங்கலை அரங்குகள் அழைத்தாய் போற்றி

பாவலர் வணங்கும் வேந்தே போற்றி
யாவரும் மதிக்க வாழ்ந்தாய் போற்றி

அலட்டா அறிவே தெளிவே போற்றி
உலராக் கனிவே வளமே போற்றி 16

திருநெல்லைத் தாயின் மைந்தா போற்றி
திருமகள் வளர்த்த திருவே போற்றி

சீதை பெற்ற செல்வா போற்றி
* அத்தை வளர்த்த அறிவே போற்றி

மனித நேயக் குன்றே போற்றி
மனிதருள் பூத்த புனிதா போற்றி

நலிந்தார் கதியென நின்றாய் போற்றி
கலையின் காவலன் ஆனாய் போற்றி

* அத்தை - ருக்மணி தேவி

ஆண்டவர் பேரா அருளே போற்றி
யாண்டும் நலமே விழைந்தாய் போற்றி

கலையுடன் கல்வி வளர்த்தாய் போற்றி
நிலைபெறும் நல்லறம் செய்தாய் போற்றி

ஊர்ஊர் திரிவார் உத்தரம் போற்றி
யார்வரினும் உண்டி அளித்தாய் போற்றி

வாழ்வாங்கு வாழ்ந்த விசாகா போற்றி
வையம் போற்றும் மூலமே போற்றி 24

காட்சிக்கு எளியாய் இனியாய் போற்றி
கலைகள் வளர்க்கக் கனிந்தாய் போற்றி

மூச்செலாம் அறமாய்க் கொண்டாய் போற்றி
முடியாத தொன்றில்லை என்பாய் போற்றி

அயரா உழைப்பால் முடிப்பாய் போற்றி
முயற்சிக்கு என்றும் வெற்றியே போற்றி

என்னை மகவாய் ஏற்றாய் போற்றி
உன்னைத் தாதையாய்த் தந்தாய் போற்றி 28

என்னிலும் எனக்கு இனியாய் போற்றி
எண்ணம் நிறைந்த இறைவா போற்றி

பன்னிரு கோவில் புதுக்கினாய் போற்றி
நன்னீர்க் குடமுழுக்கு நடத்தினாய் போற்றி

பன்றிமலை சுவாமிகள் பக்தா போற்றி
என்றும் அவரை மறவாய் போற்றி

ருக்குமணித் தேரின் பாகனே போற்றி
திக்கெட்டும் அவர்புகழ் பரப்பினாய் போற்றி 32

ஆட்டத்தை ஓவியம் ஆக்கினாய் போற்றி
நாட்டமுடன் காட்சி ஆக்கினோம் போற்றி

நடனம் இசைஉரை நண்ணினாய் போற்றி
நற்கலை யாவும் புரந்தாய் போற்றி

தன்செலவில் சிக்கனம் செய்வாய் போற்றி
தர்மத்தில் கணக்கில்லை என்றாய் போற்றி

நொடியில் முடிவுகள் எடுப்பாய் போற்றி
எடுத்த முடிவில் நிலைப்பாய் போற்றி 36

தருமம்பல நடந்திட வேண்டி எங்கும்
பெருநில வணிகம் செய்தாய் போற்றி

முக்கோடி தர்மம் முனைந்தாய் போற்றி
எக்காலும் தொடர்ந்து காப்போம் போற்றி

தாண்டிக் குடியார் சிஷ்யா போற்றி
மாண்டி ஸோரி மாணவா போற்றி

மழலைக் கல்வி போற்றினாய் போற்றி
மழலைச் சிரிப்பில் மயங்குவாய் போற்றி

தரமான கல்வி தந்தாய் போற்றி
மருவிலா மாணிக்க மணியே போற்றி

பன்னாட்டில் கல்வி பயின்றாய் போற்றி
இந்நாட்டில் அறங்கள் விழைந்தாய் போற்றி

பெரும்பொருள் கலையினால் ஈட்டினாய் போற்றி
பெறும்பயன் அறமெனக் கொண்டாய் போற்றி

எழுபத் திரண்டில் துறந்தாய் போற்றி
எண்பத் தெட்டில்விண் புகுந்தாய் போற்றி 44

பதினேழில் பலமாய்த்தடம் பதித்தாய் போற்றி
அதுவழி தொடர்வோம் முடிப்போம் போற்றி

அறவழி வெற்றி கொள்வோம் போற்றி
திருவடி அதனைச் சேர்ப்போம் போற்றி

கருவை நடுவளர் கற்பகமே போற்றி
அருமை தெரிந்து அருள்வாய் போற்றி

அகம்இதம் ஆன சுகமே போற்றி
ஆசை இல்லா அன்புருவே போற்றி 48

அருகுபோல் வேரோடி ஆல்போல் தழைத்துப்
பெருகு பயன்தரும் புண்ணியமே போற்றி

எவ்வுயிர்க்கும் இரங்கும் அருளே போற்றி
உயிர்வதை தடுக்க உதவினாய் போற்றி

கொடையும் முறையாய் அமைத்தாய் போற்றி
இயற்கை உணவைப் போற்றினாய் போற்றி

இயற்கை மருத்துவம் இயக்கினாய் போற்றி
மலைபோல் மனத்திடம் கொண்டாய் போற்றி 52

வரும்இடர் கண்டு அஞ்சாய் போற்றி
நடைமுறை ஒழுங்குற அமைத்தாய் போற்றி

நடப்பன யாவும் நன்மையே போற்றி
உன்ஆசி யாவும் பலித்தன போற்றி

உன்னருள் பெற்றார் உயர்ந்தார் போற்றி
இருவினை அகன்றிட வாழ்ந்தாய் போற்றி

மும்மலம் ஒழிந்த முக்தியே போற்றி
உறுதுணை உன்னருள் இருக்கும் போற்றி 56

திருநெல்லை தருவாள் யாவும் போற்றி
பெருமைகள் சேர்ப்போம் திருவடி போற்றி

குருவே வருகவே போற்றி போற்றி
கல்வியூர் கோவிலூர் ஆக்குவோம் போற்றி

பல்கலைக் கழகம் செய்வோம் போற்றி
தில்லைக் கோவில் திருந்தக் கட்டி

திருக்குட நன்னீர் ஆட்டுவோம் போற்றி
திருவருள் குருவருள் கூட்டுமே போற்றி.



உ
சிவமயம்

மாதவரை இழந்து மாதம் ஏழாச்சே
போதகரை இழந்து பொழுதுபல போயாச்சே !

ஆருக்கும் அஞ்சாமே அம்பலமா வாழ்ந்தாக
நூறுக்கு மேலே நான் இருப்பேன்னு சொன்னாக !

பம்பரமாச் சுத்தி பணமலையாக் குவிச்சாக
அம்பாரி ஏறி அரசனாச் சுத்தாமே !

பரதேசி ஆனாக பலதருமம் செய்தாக
மெத்தத் தருமம் மேலாகச் செஞ்சாக ! 4

பெத்த தருமம் பெருமையாச் செய்தாக
கட்டுத் தருமம் கட்டளையாச் செய்தாக !

கட்டளையா ஆரம்பிச்சு கனதனமாச் செய்தாக
சீதா பெத்தபுள்ளே சீமை எல்லாம் சுத்திவந்து !

லெட்சுமி பெத்த புள்ளே லெட்சம் லெட்சமாகச் சேத்தாக .
ருக்மணி வளர்த்த புள்ளை ஊரெல்லாம் சுத்திவந்து !

அத்தை வளர்த்த புள்ளே அளவில்லாமச் சேத்தாக
அலைஞ்சு தவிச்சு அக்கறையாச் சேத்த பணம் ! 8

சேத்த பணம் அத்தனையும் செய்வோம் தர்மமின்னு
காத்த பணம் அத்தனையும் கனதர்மம் செய்வோமின்னு !

எட்டுத்திசை ஆளனுப்பி எடுப்பாகச் செய்தாக
நாலு திசை சேதிசொல்லி நறுக்காகச் செய்தாக !

மாநாடு கூட்டி மங்கலமாச் செய்தாக
ஊர்க்கூட்டம் கூட்டி உயர்வாகச் செய்தாக !

செஞ்ச தருமமெல்லாம் சேயிழை போல் வளருதய்யா
பண்ணிய புண்ணியங்கள் பழமரமாய்க் காய்க்குதையா ! 12

இன்னும் இருக்கே எத்தனையோ செய்யனுமே
கண்ட கனவுகள் கனமாய் இருக்கே !

சொன்ன சேதிகள் சொச்சமும் இருக்கே
கல்லூரி கட்டிவச்சு கலைவளர்க்கச் சொன்னீக !

உத்தர கோசமங்கை ஒசந்த திருப்பணி
நடராஜர் திருக்கோவில் நல்ல திருப்பணி !

நல்லா நடக்கோனும் நானதைப் பார்க்கோனும்
நூறு வயது நானிருப்பேன் நல்லபடி செய்யுங்க !

இத்தனையும் விட்டுப்போக என்னய்யா அவசரமோ
அத்தனையும் விட்டுப்போக எப்படித்தான் மனசாச்சோ !

அத்தனையும் செய்யத்தான் எமைவிட்டுப் போனீகளா
அத்தனையும் செய்வோமா ஏலுமா எம்மாலே ! 18

சாமி அருள் இருந்தா சாதிப்போம் அட்டியில்லை
நாதன் துணையிருந்தால் நாம்முடிப்போம் குறையில்லை !

உங்கள் அருள் இருந்தால் உலகம் வசமாகும்
பங்கயத்தாள் கண்பார்ப்பாள் பாங்காக முடிப்போமே !

சரஸ்வதியாள் முகம்பார்ப்பாள் சடுதியிலே முடிப்போமே !
திருநெல்லை துணையிருப்பாள் திருவாக முடிப்போமே ! 21

ஸ்ரீ சற்குருநாதன் துணை



29.05.2012

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் - 630 307.

காரைக்குடி

திருமகள் ☎ : 232991